World Christian Fellowship
www.wcflondon.com
wcflondon@gmail.com

# *மீகாவின் புத்தகம்*

***பெயர் பொருள்:*** *"மீகா" என்பதற்கு எபிரேய மொழியில் "தேவனை போல யாருண்டு?" அல்லது "தேவனுக்கு ஒப்பானவர் யார்?" என்று அர்த்தமாம். இந்த புத்தகத்தில் தன்னுடைய பெயரை 7:18ல் உபயோகித்திருக்கிறார்.*

***எழுதிய வருடம்:*** *மீகாவின் புத்தகம் அநேகமாக 740 மற்றும் 710 கி.பி குள் எழுதப்பட்டிருக்கும். இஸ்ரவேல் சிறைப்படுத்தப்படுவதற்கு முன்னே இவர் இந்த உபதேசங்களை பிரசிங்கித்தார்.*

***வரலாற்று பின்னணி:***

*தேவன், இஸ்ரவேலுக்கு விரோதமாக போதகம் பண்ணும்படி ஆமோஸ் என்னும் தீர்க்கதரிசியை அனுப்பினார், ஆனால் அவர்கள் செவிகொடுக்கவில்லை. திரும்பவும் 10 வருடம் கழித்து தேவன் ஓசியா என்னும் ஒருவனை அனுப்பி அவர்களை தாம் எவ்வளவாய் நேசிகிக்றேன் என்பதை சொல்லச்சொன்னார்; அப்பொழுதும் அவர்கள் திரும்பவில்லை. அப்பொழுது அசீரியர்களால் அவர்களுடைய நகரம் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டது. அப்பொழுது தேவன் மற்றொரு தீர்க்கதரிசியை எழும்பி வர பண்ணி, அவர்கள் சிறைப்படுத்தப்போவதை குறித்து இஸ்ரவேலுக்கு மாத்திரம் அல்ல யூதாவுக்கும் எச்சரித்தார்.*

*மீகா தீர்க்கதரிசனம் உரைத்து கொண்டிருந்த சமயத்தில் வடதிசை இராஜ்யம் ஆண்டவருடைய வார்த்தையை கவனிக்காதே போனதினால் அவர்கள்*

*சிறைப்படுத்தப்பட்டார்கள். தென்திசை இராஜ்யமான யுதாவும் சீர்கேட்டுப்போனார்கள்; எனவே, யூதா பட்டணத்தின் மொரேசா ஊரானாகிய மீகாவை கர்த்தர் எழுப்பினார்.*

*யூதாதேசத்து ராஜாவான எசேக்கியா அப்போது தேவனுக்கு செவிகொடுத்ததினால் கொஞ்ச காலத்திற்கு மாத்திரம் பேராபத்து தாமதித்தது என்று வரலாறு நமக்கு சொல்லுகிறது.*

***எரேமியா 26:18, தேசத்திலே மூப்பரானவர்களில் சிலர் எழும்பி சபையாகிய ஜனங்களை நோக்கி: "யூதாவின் ராஜாவாகிய எசேக்கியாவின் நாட்களில் மொரேசா ஊரானாகிய மீகா தீர்க்கதரிசனஞ்சொல்லி, யூதாவின் சகல ஜனங்களையும் பார்த்து: சீயோன் வயல்வெளியாக உழப்பட்டு, எருசலேம் மண்மேடுகளாய்ப்போம்; இந்த ஆலயத்தின் பர்வதம் காட்டிலுள்ள மேடுகளாய்ப்போம் என்று சேனைகளின் கர்த்தர் உரைத்தார் என்று சொன்னான்.***

***அவனை யூதாவின் ராஜாவாகிய எசேக்கியாவும் மற்ற யூதர்களும் சேர்ந்து கொன்றுபோட்டார்களா? அவன் கர்த்தருக்குப் பயந்து, கர்த்தரின் முகத்தை நோக்கிக் கெஞ்சினானல்லவா? அப்பொழுது கர்த்தர் அவர்களுக்கு விரோதமாகச் சொல்லியிருந்த தீங்குக்கு மனஸ்தாபப்பட்டார்; இப்போதும், நாம் நம்முடைய ஆத்துமாவுக்கு விரோதமாக மகா பொல்லாப்பை வரப்பண்ணுகிறவர்களாயிருக்கிறோமே."***

*சிறைபிடிக்கப்பட்ட சமயத்தில் எரேமியா தீர்க்கதரிசி தீர்க்கதரிசனம் உரைத்தபோது, தென்திசை ராஜ்யம் ஆண்டவருக்கு செவிகொடுத்தது ஆனால் அவர்களுடைய மனந்திரும்புதல் 200 வருடத்திற்கு மாத்திரமே நிலைத்தது என்று பார்க்கலாம்.*

*மற்றொரு காரியத்தையும் நினைவில் கொள்ள வேண்டும், கி.பி.722ல் இஸ்ரவேல் அசீரியர்களால் சிறைப்பிடிக்கப்பட்டாலும் அவர்களுடைய வீழ்ச்சி கி.பி. 740 களிலேயே தொடங்கிவிட்டது. நகரம் வீழ்ந்துபோகப்*

*போவதை குறித்து ஆண்டவர் மீகா தீர்க்கதரிசியின் மூலம் பேசினார் என்பதை இப்புத்தகத்தின் முதல் இரண்டு அதிகாரத்தில் காணலாம்.*

*இங்கு திரும்பவும், தீர்க்கதரிசியின் மூலம் தேவனுடைய உணர்சிகளை அல்லது ஆதங்கத்தை பார்க்கலாம். அதிகாரம் 1ல் சொன்னது போல, மீகா உரக்க சத்தமாக அழுகிறார்.* ***இதினிமித்தம் நான் புலம்பி அலறுவேன்; பறிகொடுத்தவனாகவும் அம்மணமாகவும் நடப்பேன்; நான் ஓரிகளைப்போல ஊளையிட்டு, ஆந்தைகளைப்போல அலறுவேன்.***

*தேவன் மிகாவின் மூலம் கதறுகிறார் – மிக கவலையான காட்சி!! அவர்கள் ஓரிகளைப்போலவும் ஆந்தைகளைப்போலவும் அலறுவார்கள். ஓரிகள் கூட்டங்கூட்டமாக செல்லும், ஆனால் தீக்கோழிகளால் பறக்க முடியாது அவை வேகமாக ஓடக்கூடிய ஆற்றல் படைத்தது. ஓரிகளைபோலவும் ஆந்தைகளைபோவும் அலறுதல் என்பது அவைகள் வலியை தாங்கக்கூடாததும் மகிழ்ச்சியற்றதுமாயிருக்கிறது என்பதை குறிக்கிறது.*

*வேசித்தனம் விக்கிரகம் போன்ற பாவங்கள் புற்றுநோய் போல எருசலேமிற்குள் வேகமாக பரவி கொண்டிருந்ததுமல்லாமல் சில வருடங்களுக்குள் எருசலேம் தேவாலயத்தையும் அடைந்துவிடும் போல் இருந்தது. வரப்போவதை அறிந்தவரும் தேவனுமாகிய கர்த்தர் இவை எல்லாவற்றையும் தீர்க்கதரிசியின் மூலம் கதறினார்.*

**நோக்கம்**:

*இஸ்ரவேலின் வேசித்தனமும் விக்கிரகமும் யூதாவிற்குள்ளும் படர்ந்தது. வடதிசை ராஜ்யம் சிறைப்பிடிக்கப்படுவதையும் அதின் தாக்குதலையும் கண்டு பயந்தவர்கள் தப்பித்து தங்களுடைய ஊழலையும் எடுத்துக்கொண்டு தென்திசை ராஜ்யத்திற்குள் ஓடிப்போனார்கள். தேவன், தமக்கு*

உண்மையாய் இருக்க வேண்டும் என்று யூதாவை எச்சரித்ததுமன்றி அசீரியரால் சிறைப்பிடிக்கப்படுவதை குறித்தும் எச்சரிப்புக் கொடுத்தார்.

தேவன் தம்முடைய ஜனங்களோடு நேச உடன்படிக்கையில் களிகூருகிறார் என்றும் திரும்ப அவர்களுக்கு இரங்குவார் மற்றும் அவர்களுடைய பாவங்களையெல்லாம் சமுத்திரத்தின் ஆழங்களில் போட்டுவிடுவார் என்பதை இதன் மூலம் அவர்களுக்கு தெரியப்படுத்த விரும்புகிறார்.

***புத்தகத்தை பற்றிய சிறிய கண்ணோட்டம்:***

இந்த புத்தகத்தை நான்கு பாகங்களாக பிரிக்கலாம்.

| தலைப்பு | வேதப்பகுதி |
|---|---|
| குற்றச்சாட்டுகள் & எச்சரிப்புகள் | அதிகாரம் 1-2 |
| ஆட்சியாளர்கள்/அதிபதிகள் மற்றும் தலைவர்களின் அநீதி | அதிகாரம் 3:1- 4:8 |
| சீரியா, பாபிலோனிய சிறையிருப்பு மற்றும் மறுசீரமைப்பு | அதிகாரம் 4:9 - 5:14 |
| பாவத்திற்கான வருத்தம் / துயரம் மற்றும் ஆறுதல் மற்றும் மறுசீரமைப்பு | அதிகாரம் 6-7 |

***பாகம்** 1*

***அதிகாரம்** 1-2*

தேவன் சமாரியாவை தண்டிக்க போகிறார் என்று மீகா விவரித்து சொல்கிறார். ஏனென்றால், அவர்கள் தேவனை

*மறந்து போனதுமல்லாமல் பலவிதமான பாவங்களில் தங்களை ஈடுப்படுத்திகொண்டார்கள்.*

*தேவன் யூதாவை எவ்வாறு தண்டிக்கப்போகிறார் என்றும் மீகா விவரித்து சொல்கிறார். அவர் உபயோகித்த நகரங்களின் பெயர்கள் ஒவ்வொன்றிற்கும் வெவ்வேறு பொருள் உண்டு, அந்நகரத்திற்கு சடுதி(நாசம்) எவ்வாறு வர இருக்கிறது என்பதை அந்த பெயர்களின் மூலம் விளக்கம் அளித்தார். அதனால் அவர், அவர்கள் மனந்திரும்ப வேண்டும் என்று கெஞ்சினார்.*

*இந்த தேசங்களுக்கு என்ன நிகழப்போகிறது என்பதை மீகா கண்டபடியால், இந்த ஜனங்கள் விக்கிரகத்தை விட்டுவிட்டு ஜீவனுள்ள தேவனிடத்திற்கு திரும்பினாலொழிய நம்பிக்கையற்ற நிலைமை ஏற்பட்டுவிடும் என்பதை அறிந்திருந்தார். தேவனுடைய நியாயத்தீர்ப்பு உறுதியாயிருந்தது! அவர்களுடைய எதிரியாகிய அசீரியர்களால் தண்டனை பெரிதாக வருவதை அவர்களால் உணரமுடிந்தது.*

*வரலாறு இப்படியாய் சொல்லுகிறது, கி.பி. 701 ல் சனகெரிப் ராஜா எருசலேமிற்கு முன்னாக போய் 46 நகரங்களை கைப்பற்றி தனது கட்டுபாட்டிற்குள் கொண்டு வந்தான். தேவன் மீகாவின் மூலம் சொன்ன காரியம் நிறைவேரும்படியாய் இப்படி நடந்தது.*

*சவுலும் யோனத்தானும் இறந்த பொழுது, "அதைக் காத்பட்டணத்தில் அறிவியாமலும்" இதே வாக்கியத்தை கொண்டு தாவீது பேசினான் என்பதை நினைவில்கொள்ள வேண்டும்.* ***(2 சாமுவேல் 1:20).***

*'**சாப்பீர்**' என்பது ஒரு நகரத்தினுடைய பெயர், இதற்கு "**அழகான**" என்னும் பொருள். ஆனால், அதினுடைய ஜனங்கள் வெகு சீக்கிரமாய் கைதிகளாவார்கள்.*


*‘**சாயனான்**’ என்பதற்கு “**முன்னோக்கி செல்**” என்னும் பொருள். ஆனால், இந்த நகரத்தில் இருக்கிற ஜனங்கள் போரின் போது தங்களுடைய அயலாருக்கு உதவி செய்யமாட்டார்கள். மாறாக, தங்கள் சுவற்றிற்கு பின்னால் ஒளிந்து கொள்வார்கள்.*

*‘**பெத்ஏசேல்**’ என்பதற்கு “**அடைக்கலமற்ற வீடு**” மற்றும் அதின் ஜனங்கள் உதவிகரமாயிருக்கும் காரியங்களை நீக்கிவிடுவார்கள். இதற்கும்மேல் அவர்கள் யூதாவை பாதுகாக்க மாட்டார்கள் என்று பொருள்.*

*‘**மாரோத்**’ என்பதற்கு “**கசப்பு**” மற்றும், இந்த நகரத்தின் ஜனங்கள் கசப்பானவர்கள். கசப்பு நிறைந்த ஜனங்கள் நம்பிக்கையை எதிர்பார்த்திருந்தார்கள்.*

*‘**லாகீஸ்**’ என்பதற்கு “**குதிரைகளின் அணி**”, மற்றும் இந்த நகரத்தின் ஜனங்கள் தங்களுடைய வலிமையான படையை நம்பினார்கள். லாகீஸ் மீகாவின் வீட்டிலிருந்து 4 மைல் தொலைவிலுள்ள ஒரு முக்கியமான நகரமாயிருந்தது, மற்றும் அந்த பகுதியில் மிக வலிமை கொண்டதும் மேற்கு மலைகளை பாதுகாக்க கூடிய வல்லமையான இராணுவங்களை உடையதாக இருந்தது. இராணுவத்திலிருந்த ஆண்கள் வேகமாக ஓடக்கூடிய குதிரை இரதங்களை வைத்திருந்தார்கள். அப்படிப்பட்ட இரதங்கள் வேகமாக போகக்கூடியதும் வல்லமையுள்ளதும் துணிச்சலான வீரர்களையும் அச்சுறுத்தும் வகையில் இருந்தது.*

*‘**அக்சீப்**’ என்பதற்கு “**ஏமாற்று**” மற்றும் செழிப்பான நகரமாயிருந்தது. இனி அவர்கள் செழிப்பாக இருப்பதில்லை மற்றும் அவர்களிடத்தில் ஒன்றும் இராது.*



MICAH'S ISRAEL & JUDAH
JUDEAN TOWNS OF MICAH 1
Verse Name Meaning
1:10 Gath = "tell"
1:10 Beth-le-aphrah = "house of dust"
1:11 Shaphir = "beautiful"
1:11 Zaanan* = "come out"
1:11 Beth-ezel* = "house of taking away"
1:12 Maroth* = "bitter"
1:13 Lachish = "to the steeds"
1:14 Moresheth-gath = "one who is betrothed"
1:14 Achzib = "deception"
1:15 Mareshah = "conqueror"
1:15 Adullam = symbolic of hostility, i.e. David's exile in 2 Sam 23:13
* location unknown
Damascus
Zarephath
Tyre
Dan
TYRE
Hazor
SYRIA
Aphek
Sea of Galilee
Megiddo
Beth-shean
Ramoth-gilead
ISRAEL
The focus of Micah's prophecy to the Northern Kingdom (1:1, 5, 6)
Samaria
Tirzah
Shechem
Jordan River
Penuel
Reference to the crossing of the Jordan (5:5, cf. Jos 2-5))
Joppa
AMMON
Rabbah
Beth-horon
Bethel
Gilgal
Jerico
Shittim
Gezer
Ashdod
Jerusalem
Heshbon
Micah's hometown (1:1)
Shaphir
Gath
Adullam
Bethlehem
The focus of Micah's prophecy to the Southern Kingdom (1:1, 5, 9, 12; 3:10, 12; 4:2, 8)
Ashkelon
Moresheth-gath
Achzib
The prophecied birthplace of the Messiah (5:2)
Mareshah
Gaza
PHILISTIA
Lachish
Hebron
Dead Sea
Dibon
Engedi
The Judean towns singled out for destruction by the Assyrians in 1:10-15 (see the table above & note the wordplay on each disaster)
JUDAH
MOAB
Beersheba
Kir-hareseth
Reference to Balak king of Moab (6:5; cf. Num 22-24)
EDOM
Bozrah
Kadesh-barnea
N
© Mark Barry 2009 | visualunit.me | Please do not republish without permission, but feel free to copy for personal use

***பாகம்*** *2*

***அதிகாரம்*** *3:1 - 4:8*

***ஆட்சியாளர்கள் மற்றும் தலைவர்களின் அநீதி***

***வரப்போகிற நியாயத்தீர்ப்பு: பாவமும் அதின் விளைவுகளும், குணப்படுத்த முடியாதது.***

*இஸ்ரவேலை ஆட்சி செய்தவர்கள் நியாயாதிபதிகளாய் செயல்பட்டு வந்தபடியால் அவர்களே அத்தேசத்தின் கட்டளைகளுக்கு பொறுப்பானவர்கள். எதிர்பாராதவிதமாக, அவர்களோ ஊழல் செய்பவர்களாயும் மற்றும் பெலவீனர்களையும் ஏழைகளையும் பாதுகாப்பதற்கு பதிலாக அவர்களை தவறான முறையில் பயன்படுத்த தொடங்கினார்கள்.*

*தேவன் மீகாவின் மூலம் எல்லா தேசத்தலைவர்களோடும் பேசினார்.*

1. *அதிபதிகளாயிருந்த நியாயாதிபதிகள் (வச1)*
2. *பொய் தீர்க்கதரிசிகள் (வச 5)*
3. *பொல்லாதவர்களாகிய ஆசாரியர்கள் (வச11)*

*குணப்படுத்தமுடியாதபடிக்கு தேசத்தலைவர்கள் ஊழல் செய்கிறவர்களாயிருந்தால், இதற்கு ஒரே பலன் நியாயத்தீர்ப்பு மட்டுமே. ஏனென்றால் பொல்லாத தலைவர்களினிமித்தம் இந்த ஜனங்கள் பாடுபட வேண்டியிருக்கிறது மற்றும் அவர்களுடைய எதிரிகளே அவர்களை அழிக்கப்போகிறார்கள்.*

*புதிய எருசலேம் எதிர்காலத்தில் யாரோ ஒருவரால் கட்டப்படபோவதை பற்றி மீகா விவரிக்கிறார்.*

*எனினும், பாடுகளுக்கு பின்பு மீட்பு என்னும் நம்பிக்கை உண்டு. ஆண்டவரே எருசலேமை ஆளுவார். இஸ்ரவேலர்கள் தங்கள் தேசத்திற்கு திரும்புவார்கள். பழைய எருசலேம் பொல்லாத தலைவர்கள் நிமித்தம் பாடுபட்டது. இனி புதிய எருசலேம் உண்டாகும். மேசியா அங்கு இருப்பார். அவர்களை ஆளுவார் அவர்களுடைய எல்லா எதிரிகளையும் மேற்கொள்ளுவார். எனினும், மேசியாவால் காப்பாற்றப்படும் ஜனங்கள் மாத்திரம் தங்கியிருப்பார்கள். அவர்கள் தேவனை நேசித்து அவருக்கு கீழ்படிந்து இருப்பார்கள் (மீகா 4:1-8).*

***பாகம் 3***

***அதிகாரம் 4:9 - 5:14***

***சீரியா, பாபிலோனிய சிறையிருப்பு மற்றும் மறுசீரமைப்பு***

***வரப்போகிற நியாயத்தீர்ப்பு: இராஜாவும் இராஜ்ஜியமும்: தவிர்க்கமுடியாதது Inevitable***

*சுவாரஸ்யமாக, வேதம் கடினங்களை (doom) மாத்திரமல்ல நம்பிக்கையையும் கொடுக்கிறது. வசனங்கள் 9-10 அவர்கள் அனுபவிக்கப்போகும் கஷ்டங்களைக் குறித்தும் பின்னர் வசனங்கள் 11-13 சிறந்த எதிர்காலத்தையும் தெரிவிக்கின்றன. ஆண்டவர் எருசலேமை 'சீயோன் குமாரத்தி' என்று அழைக்கிறார்.*

*நியாயத்தீர்ப்பின் வேதனை கடினமாக இருக்கும் என்பதால் ஆண்டவர் அவர்களை எழும்பி புறப்பட ஆணையிடுகிறார். ஆயினும் வசனம் 13 ல் கோதுமையின் மணியை எவ்வாறு உடைத்து அதை புடமிடுகிறோமோ அது போல தேவன் அவர்களிடத்தில் அவர்களுடைய எதிரிகளை முரியடிக்கச்சொல்லுகிறார்.*

***வரப்போகிற ராஜா:***

*மேசியா மூலமாய் தேவன் இரட்சிப்பை பற்றி பேசுகிறார். அதற்கு முக்கியத்துவமாய், எருசலேமிற்கு சனகெரிப்பின் காலத்தில் தாக்குதல் உண்டாகும்.*

*இயேசுவைப் பற்றி மற்றொரு தீர்க்கதரிசனம் என்னவென்றால் அவருடைய எதிகள் அவரை அடிப்பார்கள். போர்வீரர்கள் எருசலேமின் ராஜாவை அறைவார்கள். முக்கியமாக, ஒரு கம்பியைகொண்டு அவருடைய கன்னத்தில் அடிப்பார்கள். ஆனால், ராஜாவாகிய அவரால் அவரை காப்பாற்றிக்கொள்ள முடியாது.*

***ஏசாயா 50:6, அடிக்கிறவர்களுக்கு என் முதுகையும், தாடைமயிரைப் பிடுங்குகிறவர்களுக்கு என் தாடைகளையும் ஒப்புக்கொடுத்தேன்; அவமானத்துக்கும் உமிழ்நீருக்கும் என் முகத்தை மறைக்கவில்லை.***

***மீகா 4:9 - 5:1*** *ல், "வலி" என்கிறதான வார்த்தையை நான்கு முறை பார்க்க முடியும் – நான்கு விதமான வலி மற்றும் அவர்கள் தேவனுக்கு கீழ்ப்படியாமல் போனதினிமித்தம் அதை அந்த ஜனங்கள் தாங்கிக்கொண்டு தான் ஆகவேண்டும்.*

- *ஒரு ஸ்திரீயானவள் பிரசவத்தின் போது ஏற்படுகிற வலியை போல எங்களுக்கு வலிக்கிறது. (4:9).*
- *நாங்கள் தேவனை விட்டு பிரிந்திருக்கிறோம், மற்றும் அவருடைய ஜனங்களை விட்டு பிரிக்கப்பட்டோம். (4:10).*
- *எல்லாம் எங்களுக்கு கஷ்டத்தை உருவாக்குவது போலிருக்கிறது. எங்களுக்கு விரோதமாக அடிகள் விழுவது போல் இருக்கிறது. (4:11).*

- *எங்களை சுற்றி முற்றிகைப் போடப்பட்டது. நாங்கள் தப்பித்து கொள்ள முடியாது. எங்களை நாங்களே வெறுக்கிறோம். (5:1).*

***மீகா 5:2, "எப்பிரானத்தா என்னப்பட்ட பெத்லகேமே, நீ யூதேயாவிலுள்ள ஆயிரங்களுக்குள்ளே சிறியதாயிருந்தும், இஸ்ரவேலை ஆளப்போகிறவர் உன்னிடத்திலிருந்து புறப்பட்டு என்னிடத்தில் வருவார்; அவருடைய புறப்படுதல் அநாதி நாட்களாகிய பூர்வத்தினுடையது."***

*இன்று, பெத்லகேம் என்னும் ஊரை பற்றி உலகம் முழுவதும் அறிந்திருக்கும். ஏனென்றால், மேசியாவாகிய இயேசு கிறிஸ்து அங்கேதான் பிறந்தார். இயேசு பிறந்த பொழுது அதிகமாக பெத்லகேமை பற்றி ஜனங்களுக்கு தெரியாது. ஏரோது ராஜா இயேசு பிறந்திருக்கிறார் என்று கேள்விப்பட்ட பொழுது அவன் வருந்தி தலைவர்களை அழைத்து மேசியா எங்கே பிறந்திருக்கிறார் என்று விசாரித்த போது அவர்கள் அவர் யூதேயாவில்லுள்ள பெத்லகேம் என்னும் ஊரில் பிறந்திருக்கிறார் என்று சொன்னார்கள். அதைத்தான் இந்த தீர்க்கத்தரிசி எழுதியிருக்கிறார். தலைவர்கள் இந்த வேதவசனத்தின் பாதி பகுதியை திரும்ப (மீகா 5:2) மத்தேயு 2:3-6ல் குறிப்பிட்டு இருக்கிறார்கள்.*

*பெத்லகேம் மற்றும் எப்பிராத்தா ஆகிய இரண்டும் ஒன்று தான். இரண்டு பெத்லகேம் இருக்கிறது. ஒன்று தென்திசை ராஜ்யத்திலும் மற்றொன்று வடதிசை ராஜ்யத்திலும் அமைந்திருக்கிறது. ஆகவே, எருசலேமிலிருந்து 6 மைல் தொலைவிலுள்ள எப்பிராத்தா என்று முன்பு அழைக்கப்பட்ட ஊர்தான் இதுதானா என்பதை அவன் உறுதிப்படுத்திகொள்கிறான்.*

*தாவீது தகப்பனாகிய ஈசாய் என்னும் பேருள்ள மனுஷன் எப்பிராத்தியன். (1 சாமுவேல் 17:12). ஈசாயென்னும் அடிமரத்திலிருந்து(தாவீதின் குடும்பத்திலிருந்து) ஒரு துளிர்*

*தோன்றி (புதிய ராஜா), அவன் வேர்களிலிருந்து ஒரு கிளை எழும்பிச் செழிக்கும். (ஏசாயா 11:1).*

*ராஜாவின் விசுவாசம் மற்றும் அவருடைய ராஜ்யத்தை பற்றிய செய்திகள் அதிகாரம் 4 மற்றும் 5 ல் சொல்லப்பட்டிருக்கிறது. என்னவென்றால், "இந்த செய்தி எதிர்காலத்தில் ஒரு குறிப்பிட்ட நேரத்தைக் குறிக்கிறது. இந்த காலத்தில் தான் மேசியா தேசங்களை மேற்கொண்டு (ஆளுவார்/ ஜெயிப்பார்) மீதியானவர்களை கூடிச் சேர்ப்பார். பெத்லகேமிலிருந்து வரப்போகிற மேய்ப்பரின் நிழலிலே தங்குவார்கள்." இங்கே ஒவ்வொரு வாக்குத்தத்தத்திற்கு பின் "கர்த்தர் சொல்லுகிறார்" என்கிற வார்த்தையை வாசிக்கலாம்.*

*இங்கே சொல்லப்பட்டிருக்கிற "செய்தி" என்பது இஸ்ரவேலை தேவன் இரண்டு வகையில் பாதுகாக்கிறார்:*

1. *தேவன் இஸ்ரவேலை ஆவிக்குரியவைகளில் சுத்தமாகவும் (வச10-14) – முழுமையாக கழுவி சுத்திகரிப்பார்.*

*இச்செய்தியில் ஒவ்வொரு பகுதியும் "அழிப்பேன்" (வச 10-14) என்கிற வார்த்தைகளை கொண்டு ஆரம்பிக்கப்படுகிறது. தேவன் தேசத்தை பொல்லாத காரியங்களில் இருந்து விடுவிப்பார். தேசத்தை ஆவிக்குரிய வகையில் சுத்திகரிப்பதற்கு அதில் காணப்படுகிற அசுத்தமான காரியங்களை அழித்து விடுவார். இஸ்ரவேல் ஜனங்கள் விசுவாசித்த நான்கு விதமான பொல்லாத காரியங்கள் என்னவென்றால்:*

*a) அவர்களுடைய வலிமை மற்றும் ஆற்றல்*
*b) இராணுவ சக்தி*
*c) அவர்களுடைய எதிர்காலத்தை பார்க்கும்படியாக அவர்கள் உபயோகித்த சூனிய வித்தைகள்*
*d) விக்ரகம், பொய் தேவர்கள்.*

2. *கீழ்ப்படிய மறுக்கிற தேசங்களை தேவன் கடுமையாக தண்டிப்பார். (வச 15)*

***பாகம் 4***

***அதிகாரம் 6-7***

***பாவத்திற்கான வருத்தம் / துயரம் மற்றும் ஆறுதல் மற்றும் மறுசீரமைப்பு:***

***வரப்போகிற ஆறுதல்: ஆண்டவரும் அவருடைய நியாயமும்: தப்பித்துக்கொள்ள முடியாது.***

*இந்த பகுதி ஒரு நீதிமன்ற வழக்கை போல இருக்கிறது. தேவன் ஆதாரங்களை அழைக்க கட்டளையிடுகிறார். எனினும், இங்கு ஆதாரம் என்பது மனிதர்கள் அல்ல மலைகளும் பர்வதங்களுமே.*

*தேவன் இக்கேள்விகளை கேட்கிறார்:*

1. *'நான் உனக்கு என்ன செய்தேன்??'*
2. *'நான் எதினால் உன்னை விசனப்படுத்தினேன்??'*

*இந்த ஜனங்கள் மறுதரம் சொல்லாதபோதும் தேவன் தம்முடைய பெரிதான அன்பினால் அவர்களை குற்றஞ்சாட்டினார். அவருடைய வார்த்தையில் உண்மையும் இரக்கமும் இருந்தது. கர்த்தருடைய நோக்கம் அவருடைய ஜனங்களாகிய இஸ்ரவேலை தம்மோடு திரும்ப சேர்த்து கொண்டு அவர்களோடு அவர் செய்த உடன்படிக்கையை அவர்கள் நினைவு கூர்ந்து அவர் செய்த உடன்படிக்கையில் அவர்கள் கீழ்ப்படிய வேண்டும் என்பதே. இரண்டு முக்கியமான காரியங்களை குறித்து அவர்களிடத்தில் பேசினார்:*

*முன்பு, எகிப்திலே இஸ்ரவேல் ஜனங்கள் அடிமைகளாயிருந்தபோது தேவன் அவர்களை எவ்வாறு*

காப்பாற்றினார் மற்றும் அவர்களை எகிப்திலிருந்து எவ்வாறு வெளியே கொண்டு வந்தார் என்பதை நினைவுப்படுத்தினார். அவர்கள் அங்கே அடிமைகளாயிருந்த போது அவர்களை விடுவித்தார். தேவன் விசேஷித்த தலைவர்களை அவர்களுக்கு ஏற்ப்படுத்தினார். அதிலே மோசே என்பவன் பிரதான தலைவனாயிருந்தான். ஆரோன் பிரதான ஆசாரியனாயிருந்தான். மிரியாம் என்பவள் தீர்க்கதரிசியும் பெண் கவிஞராக இருந்தாள். (யாத்திராகமம் 15:20-21).

1. தேவன் தான் செய்த கிரியைகளில் மற்றொரு அற்புதமான ஒன்றை நினைவுப்படுத்தினார். தேவன் செய்த மகா வல்லமையான கிரியைகள் இதுவே; இது இஸ்ரவேல் தேசம் வலிமையற்றதாயிருந்த போது சம்பவித்த காரியங்கள். தேவன் ஜனங்களை பொல்லாத அரசியல் தலைவர்களிடமிருந்து காப்பாற்றினார். மோவாபிய ராஜாவான பாலாக் ஒரு தலைவனாயிருந்தான். மற்றும் தேவன் அவர்களை பொல்லாத ஆவிகளையுடைய தலைவர்களாகிய பேயோரின் குமாரனாகிய பிலேயாமிடமிருந்து காப்பாற்றினார். பாலாகும் பிலேயாமும் வாழ்ந்த நாட்களை நினைவுபடுத்தும்படி தேவன் இஸ்ரவேல் ஜனங்களுக்கு சொன்னார். மோவாபிய ராஜாவான பாலாக், இஸ்ரவேலுக்கு விரோதமாக சந்யிட்டான். மற்றும் பிலேயாமிடம் இஸ்ரவேலை சபிக்கும்படி கேட்டுக்கொண்டான். ஆனால், தேவன் பிலேயாமின் வார்த்தைகளுக்கு செவிகொடுக்கவில்லை. அவர் பிலேயாமை இஸ்ரவேலை சபிக்க விடவில்லை. முடிவாக தேவன் தம்முடைய ஜனத்திற்கு நன்மைசெய்திருக்கிறார். மற்றும் தம்முடைய ஜனங்களை பாலாக்கின் கைகளுக்கு தப்புவித்திருக்கிறார். (யோசுவா 24:9-10).

பின்பு, எப்படிப்பட்ட தகனபலிகள் தேவனை பிரியப்படுத்தும் என்பதை பற்றி ஒரு விவாதம் ஏற்பட்டது. (வச 6-7). தேவன்

*அவர்களிடத்தில் அவருக்கு என்ன வேண்டும் என்பதைக் குறித்து சொன்னார், மீகா 6:8, மனுஷனே, நன்மை இன்னதென்று அவர் உனக்கு அறிவித்திருக்கிறார்; நியாயஞ்செய்து, இரக்கத்தைச் சிநேகித்து, உன் தேவனுக்கு முன்பாக மனத்தாழ்மையாய் நடப்பதை அல்லாமல் வேறே என்னத்தைக் கர்த்தர் உன்னிடத்தில் கேட்கிறார்.*

*இப்படியாய் ஜனங்கள் வாழ வேண்டும் என்று தேவனுடைய உடன்படிக்கையின் தேவையாயிருக்கிறது:*

1. *எது சரியோ அதை நீ செய்ய வேண்டும்; தலைவர்கள் அப்படி செய்யவில்லை. மாறாக, ஆதரவற்றவர்களையும் ஏழைகளையும் ஒடுக்கினார்கள். (மீகா 2:1-2, 3:1-3, 5-7 & 9-11)*

2. *இரக்கத்தை சிநேகித்து எளியவனிடத்தில் இரக்கத்தை காட்டு; எரிச்சலோடு அல்லாமல் சந்தோஷத்தோடு செய்ய வேண்டும்.*
3. *உன் ஆண்டவராகிய தேவனுக்கு முன்பாக மனத்தாழ்மையாய் வாழ வேண்டும்.*

*முதல் இரண்டு காரியங்களும் மற்றவர்களோடு எவ்வாறு நடந்து கொள்ளவேண்டும் என்பதைப்பற்றி சொல்லுகிறது; கடைசி காரியம் தேவனுக்கு முன்பாக எவ்வாறு இருக்க வேண்டும் என்பதை சொல்லுகிறது. வாழ்க்கையில் மத சம்பந்தப்பட்ட காரியங்களை காட்டிலும் நீதி / நல்ல நடத்தையோடு வாழ்வதே முக்கியம் என்பதை தேவன் அவர்களிடத்தில் விரும்புகிறார்.*

*அவர்கள் பொல்லாப்பு செய்கிறவர்களாயிருந்தும் தேவன் அவர்களிடத்தில் நல்லவரும் உண்மையுள்ளவருமாயிருந்தார். இதுவரையிலும், அவர்கள் தங்களுடைய பொல்லாத வழிகளை விட்டு விலகவில்லை என்ற காரணத்தினால் ஜனங்களின் மீது நியாயத்தீர்ப்பு வந்தது:*

- *எருசலேம் நகரம் (வச 9)*
- *கள்ளத்தராசும் (வச 10-11)*
- *பொய் (வச 12)*
- *ஜனங்கள் பசியினால் தவிப்பார்கள் (வச 14)*
- *மற்றவர்கள் அவர்களுடைய தானியத்தை களவாடி கொள்வார்கள் (வச 15)*
- *தொடர் / கூடுதலான தண்டனைகள் (வச 16)*

*அதிகாரம் 7:1-7 ல் , மீகா பொல்லாப்பை பற்றியும் ஒருவன் தேவனுக்கு முன்பாக எவ்வாறு சரியாக நடந்து கொள்ளவில்லை என்பதை பற்றியும் பேசியிருக்கிறார். எனவே, தேவனுடைய நியாயத்தீர்ப்பினால் எருசலேமின் சமூக கட்டமைப்புகள் நொறுங்கும். எனினும், கோத்திரத்தலைவனாகிய ஆபிரகாமிற்கு அவர் பண்ணின வாக்குதத்தத்தின்படி முடிவிலே ஆண்டவர் எவ்வாறு தம்முடைய ஜனங்களை மீட்டுக்கொள்வார் என்று தீர்க்கதரிசனம் ஒரு உன்னத குறிப்போடு இப்படியாய் நிறைவாகிறது. கடைசி 12 வசனங்களும் எபிரேய மொழில் பாடல் போல இருக்கிறது.*

*வச 10-11: ஜனங்கள் தங்கள் பாவத்தை அறிக்கையிட்டு தேவனை நேசிக்கிறோம் என்று அறிக்கை செய்வார்கள். பின்பு, தேவன் எங்களுடைய எதிரிகளை எங்கள் பாதங்களின் கீழ் மிதித்து போடும்படி செய்வார்.*

*வச 11-17: எருசலேம் ஒரு வயல்வெளியை போலிருக்கும் அதிலே தேவனுடைய ஜனங்களாகிய ஆடுகள் தங்கியிருப்பார்கள். அவர்கள் அவருடைய ஆடுகளாயிருப்பார்கள் அவர் அவர்களுடைய மேய்ப்பனாயிருப்பார். இந்த உலகம் தேவனுடைய தண்டனையினால் பாடுபடும் ஆனால் இஸ்ரவேல் ஜனங்கள் மற்ற தேசங்களுக்கு உதவி செய்வார்கள். தேவனோடு சரியான உறவை வைத்துகொள்ளவது எப்படி என்று மற்ற*

*தேசத்தாருக்கு காண்பிப்பார்கள். இன்று அவர்கள் தேவனுக்கு எதிரிகளாயிருந்தாலும் வருங்காலத்திலே அவருக்கு சிநேகிதராயிருக்க கூடும்.*

***மீகா** 7:18-20, [18]**தமது சுதந்தரத்தில் மீதியானவர்களுடைய அக்கிரமத்தைப் பொறுத்து, மீறுதலை மன்னிக்கிற தேவரீருக்கு ஒப்பான தேவன் யார்? அவர் கிருபைசெய்ய விரும்புகிறபடியால் அவர் என்றென்றைக்கும் கோபம் வையார். [19]அவர் திரும்ப நம்மேல் இரங்குவார்; நம்முடைய அக்கிரமங்களை அடக்கி, நம்முடைய பாவங்களையெல்லாம் சமுத்திரத்தின் ஆழங்களில் போட்டுவிடுவார். [20]தேவரீர் பூர்வநாட்கள்முதல் எங்கள் பிதாக்களுக்கு ஆணையிட்ட சத்தியத்தை யாக்கோபுக்கும், கிருபையை ஆபிரகாமுக்கும் கட்டளையிடுவீராக.***

*தேவனுக்கும் அவருடைய மகா வல்லமைக்கும் நன்றி செலுத்துவது என்ன ஒரு மகத்தான விதம். தேவன் அவர்களுடைய பாவங்களை நீக்கி அவைகளை சமுத்திரத்தின் ஆழங்களிலே தள்ளுவார். ஆபிரகாமோடு வாக்கு பண்ணினபடி தம்முடைய ஜனங்களிடத்திலும் செய்வார்.*

## ***முடிவுரை:***

*ஆபிரகாம், மற்ற காரியங்களில் தவறின போதிலும் தேவன் செய்த உடன்படிக்கையில் உண்மையுள்ளவனாயிருந்தான். இதுவரைக்கும் இந்த கடிதத்தில், மீகா யாக்கோபைப் பற்றி தீர்க்கதரிசனஞ் சொல்லியிருக்கிறார். இப்போது 10 வது முறையாக இவர் பெயர் குறிப்பிடப்படுகிறது. எனினும், முதல் முறையாக ஆபிரகாமின் பெயரோடு நிறைவு செய்கிறார்.*

*தேவன் ஆபிரகாமிற்கு வாக்கு பண்ணினதை நிறைவேற்றினதுமல்லாமல். மற்றும் அவர் வாக்கு பண்ணினதை மோசேயோடும் யோசுவாவோடும் நிறைவேற்றினார். தேவன் தம்முடைய ஜனங்களுக்கு*

*வாக்குத்தத்தம் செய்த காணான் தேசத்திற்கு அவர்களை வழி நடத்தினார்.*

*கோத்திரத் தலைவனாகிய ஆபிரகாமிற்கும், ஈசாக்குக்கும், யாக்கோபுக்கும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட இடத்திலே மீகா வாழ்ந்தார். அப்படிப்பட்ட உன்னதமான தேவனுடைய அன்பு இன்றும் நமக்கு உண்டு. ஏனென்றால் நம்முடைய பாவங்களை 2000 ஆண்டுகளுக்கு முன்பாக சிலுவையில் சுமந்து தீர்த்தார்.*

*தேவனுடைய மகத்தான அன்பும் இரக்கமும் எல்லா காலங்களிலும் இருந்திருக்கிறது. அவர் கிறிஸ்துவை உயிரோடு எழுப்பினார். மில்லியன் ஜனங்கள் இயேசுவை விசுவாசித்தார்கள். அவர் சிலுவையில் மரித்ததினால் அவரை விசுவாசித்தார்கள். இந்த விசுவாசிகள் பூமியிலுள்ள எல்லா தேசங்களிலிருந்து வருவார்கள். ஆவிக்குரிய வகையில் இவர்கள் ஆபிரகாமின் ''பிள்ளைகள்'' (கோத்திரம்) (ரோமர் 4:17; கலாத்தியர் 3:6-29).*

*இயேசுவை விசுவாசிக்கிற ஜனங்கள் தேவனிடத்தில் பெரும் மதிப்புக்குரியவர்கள். இந்த அற்புதமான தேவனை எல்லா சூழ்நிலைகளிலும் அவர்களால் விசுவாசிக்க முடியும். எனவே, பழைய ஏற்பாட்டில் சொல்லப்பட்டது போல இன்றைய ஜனங்கள் இஸ்ரவேலில் மீதியானவர்கள்.*

## *இன்றைய பயன்பாடு:*

1. ***தேவன் உண்மையுள்ளவராகவே இருக்கிறார்***

*ஜனங்கள் எல்லாவிதமான தீங்கான காரியங்களை செய்திருந்தாலும், இன்னும் தேவன் தம்முடைய வார்த்தையில் உண்மையுள்ளவராகவே இருக்கிறார்.*

### *2. தேவன் அன்பாகவே இருக்கிறார்*

*தேவன் தம்முடைய ஜனங்களிடத்தில் பாராட்டிய அன்பை ஓசியாவின் புஸ்தகத்திலிருந்து மாத்திரமல்ல மீகாவின் தீர்க்கதரிசனதிலிருந்தும் தேவன் எவ்வளவு அழகாக திட்டமிட்டு தம்முடைய ஜனங்களை வழிநடத்தியிருக்கிறார் என்பதை பார்க்க முடிகிறது.*

### *3. பலவீனமானதை தெரிந்து கொள்கிற தேவன்*

*பல நூற்றாண்டுகளுக்குமுன்பதாக, தேவன் சாமுவேலை அழைத்து பெத்லகேம் என்னும் ஊரிலுள்ள ஈசாயின் குமாரனை ராஜாவாக தெரிந்து கொள்ளும்படிக்கு அவனை அபிஷேகம் பண்ணும்படி அனுப்பினார். ஆனால், சாமுவேல் ஈசாயினுடைய மூத்த குமாரர்களை தெரிந்துகொள்ளாமல் இளையவனாகிய தாவீதை தெரிந்துகொண்டான் (1 சாமுவேல் 16:1-13).தேவன் ஞானிகளையும் பலமுள்ளவைகளையும் வெட்கப்படுத்தும்படிக்கு - பெலவீனமானவைகளையும் பைதியமானவைகளையும் தெரிந்து கொண்டார். (1 கொரிந்தியர் 1:18-31).*

*தேவன் வாக்கு பண்ணினபடி நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மேசியாவாக பெத்லகேம் என்னும் சிறிய பட்டணத்திலிருந்து வருவார்.*

### *4. தேவன் நம்மிடத்தில் என்ன எதிர்பார்க்கிறார்?*

***மீகா 6:8, மனுஷனே, நன்மை இன்னதென்று அவர் உனக்கு அறிவித்திருக்கிறார்; நியாயஞ்செய்து, இரக்கத்தைச் சிநேகித்து, உன் தேவனுக்கு முன்பாக மனத்தாழ்மையாய் நடப்பதை***

**அல்லாமல் வேறே என்னத்தைக் கர்த்தர் உன்னிடத்தில் கேட்கிறார்.**

- *மற்றவர்களிடத்தில் நல்லவிதமாக நடந்துகொள்ளுங்கள்*
- *ஆறுதல் செய்து ஒரே மாதிரியான அன்பை காட்டுங்கள்*
- *தேவனிடத்தில் தீவிரமாக இருங்கள்*